வேலைநிறுத்தமே, வேண்டும் உரிமையைத் தந்தது

Phone No 4502
விலை அரை அணா

Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (7—4—50) வெளியூர் (8—4—50) [இதழ் 217

இரத்தம் சிந்திப் பெற்றவற்றை எளிதில் பறித்துவிடமுடியாது

வேண்டாம் வீண் வம்பு-வேதனை தருமென்கிறார் தோழர் தாஸ்

தொழிலாளரைத் துரோகம் செய்வதே தொழில் உறவு மசோதா

'பல ஆண்டுகள் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்தும், ரத்தம் சிந்தப் போராடியும் தொழிலாளர்கள் பெற்ற உரிமைகள் பலவற்றை அரசியலார் கொண்டுவருள்ள தொழில் உறவு மசோதா பறித்துவிடுகிறது. வேலை நிறுத்தம் செய்யும் உரிமை அடிப்படை உரிமையாகும். இவ்வுரிமையை ஜனநாயக நாடுகளெல்லாம் அங்கீகரிக்கின்றன. வேலை நிறுத்தம் என்னும் இந்த ஆயுதத்தின் உதவி கொண்டுதான், தொழிலாளர்கள் தங்கள் நிலையை இவ்வளவுக்காவது உயர்த்திக்கொண்டிருக்கிறார்கள். இவ்வுரிமை பறிக்கப்படுவதைத் தொழிலாளர் இதுவரை எதிர்த்து வந்திருக்கிறார்கள்; கடைசி மூச்சுள்ள வரை எதிர்ப்பார்கள். சமீபத்தில் அமெரிக்காவில் நடந்த சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தம் இதற்கொரு எடுத்துக்காட்டு. ஜனாதிபதி ட்ருமன் உத்தரவைக்கூட பொருட்படுத்தாமல் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்த காரணத்தால், தங்கள் கோரிக்கைகளில் வெற்றியும் பெற்றார்கள்" என்று ஒரிஸாவைச் சேர்ந்த தோழர் சரங்தர்தாஸ் என்பவர், தொழில் உறவு மசோதாவை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் பேசினார்.

வேலைநிறுத்தத்துக்குப் பதிலாகக் கட்டாய மத்தியஸ்தம் நடத்துவதை புகுத்துவதைக் குறிப்பிட்டுத் தோழர் தாஸ் பேசுகையில் [illegible] மூ[illegible] வெ[illegible] [illegible] நடத்துபவர்களுக்கு அக்கரையில்லாததால், தொழிலாளருக்கு நியாயம் கிடைப்பதில்லையென்று அவர் அறிவித்தார். தொழில் உறவு மசோதா முதலாளிகளின் நன்மைக்கென்றே கொண்டுவரப்பட்டது போன்றுள்ளதென்றும், அது நிறைவேற்றப்பட்டால் உற்பத்தி அதிகரிப்பதற்குப் பதிலாகக் குறைவது திண்ணமென்றுதோழர் தாஸ் எச்சரித்தார். தொழில் உறவு மசோதாவின் பிரதிநிதிகள் தொழில் சங்கங்களின் எண்ணத்தை அறிவதற்காக கொடுக்கப்பட வேண்டுமென்று தோழர்தாஸ் ஒரு தீர்மானமூலம் வற்புறுத்தினார்.

ஆனால் அவருடைய தீர்[illegible] நிராகரிக்கப்[illegible]டுவிட[illegible] [illegible] போன்று முற்போக்குப்பாதையில் செல்பவராம், தொழிலாளரின் நன்மைக்காகப்பாடுடுபவர்களும் இந்தியப் பாராளுமன்றத்தில் வெகு சிலரே உள்ள காரணத்தால் தான்.

முதலாளிகளின் கைப்பாவையாக காங்கிரஸால் வளர்க்கப்படும் இந்திய தேசியத் தொழிற்சங்கத்தின் காரியதரிசியாகிய தோழர் ஹரிஹர நாதசாஸ்திரி கூறுகிறார், மசோதா மிகவும் சிறந்ததென்று. அவர்கள் இருவர்! ஒருவர், மசோதா முதலாளிகள்

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

செஞ்சீனாவுக்கு அமெரிக்கா கோதுமை கொடுக்குமாம்!

—(0)—

மக்கள் பசியால் வாடுகிறார்களே என்று முதலைக் கண்ணீர்

வாஷிங்டன், ஏப். 6—

பஞ்சக் கொடுமையால் தவிக்கும் சீனர்களுக்கு உணவு உதவி செய்வதுபற்றி அமெரிக்க சர்க்கார் ஆலோசித்து வருவதாக, யுனைடெட் ஸ்டேட் ராஜாங்க மந்திரி டீன் ஆக்கீஸன் கூறியிருக்கிறார்.

இந்த உதவி தனிப்பட்டவர்கள் மூலமே இருக்கும் என்றும், அது வும் கப்பல்களில் கோதுமையை அனுப்புவதுடன் நிறுத்திக்கொள்ளப்படும் என்று குறிப்பிட்ட அவர் தெரிவித்ததாவது:—

இம்மாதிரி உதவி வேண்டும்என்று மாஸேதுங் சர்க்கார் கேட்கவில்லை ஆனால் கஷ்டப்படுபவர்களுக்கு உதவவேண்டும் என்கிற இரக்க மனப்பான்மையையும், சீன மக்களிடம் அமெரிக்காவுக்குள்ள நீண்டகால உறவுதான் இவ்விதக் காரணமென்றும் அவர் கூறுகிறார். இந்த உதவியை அளிப்பதில் ஒரு பெரிய கஷ்டம் இருக்கிறது. அனுப்பப்படும் கோதுமை உண்மையில் கஷ்டப்படுபவர்களுக்குப் போய்ச் சேரவேண்டும். உணவுக்காக மஞ்சூரியாவைச் சுரண்டிவரும் ரஷ்யர்கள் வசம் இந்த உணவு சிக்கக்கூடாது" என்று தோழர் அக்கீசன் அறிவிக்கிறார்.

20,000 யூதர்கள் எகிப்திலிருந்து வெளியேற்றம்

கெய்ரோ, ஏப். 6—

பாலஸ்தீனப் போர் முடிந்ததிலிருந்து எகிப்திலுள்ள 76000 யூதர்களில் 20000 பேர் நாட்டைவிட்டு வெளியேறியிருப்பதாக, அரபுலீக் வட்டார புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

பக்தன் பாதகனாகக் காட்சி அளிக்கும் படலம்!

ஆதிக்கம் குலையுமோ என்ற அச்சம் சாபம் கொடுத்துவிட்டது

புதுடில்லி, ஏப். 6—

சென்னையின் முன்னாள் பிரதமர் தோழர் டி. பிரகாசத்தின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் போவதாக நோட்டீஸ் விட, காங்கிரஸ் காரியக் கமிட்டி நேற்று முடிவு செய்துவிட்டது. இவ்வாறு ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள இரண்டு காரணங்கள் உண்டு என்கிறார். சென்னையில் [illegible] [illegible]கியுள்ள தோழ[illegible] வெங்கட்ராவ் முதல், காரணம், மறைத்துவிட வேண்டுமென்று காங்கிரஸ் காரியக் கமிட்டி முடிவு செய்திருந்தும், சென்னை சட்டசபையில் மந்திரிகள் மீதுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட வேண்டுமென்று தோழர் பிரகாசம் தீர்மானம் கொண்டுவந்தது, இரண்டாவது காங்கிரஸ் கட்சியிலிருந்து தனியாக உட்கார விரும்புவதாகச் சபாநாயகருக்குத் தெரிவித்துவிட்டு அவ்வாறு உட்கார்ந்தது.

தோழர் பிரகாசம் கோஷ்டியில் சேர்ந்துகொண்ட மற்ற 15 அங்கத்தினர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை நோட்டீஸ் விடப்படும்.

இன்று காரியக்கமிட்டி கூடி ஐக்கிய மாகாணத்திலும், பஞ்சாபிலும் ஏற்பட்டுள்ள சிக்கல்களைப் பற்றி ஆராயுமாம்.

மந்திரிகள் மீதுள்ள குற்றச்சாட்டுகளைப் பற்றித் தீர விசாரிக்கப்பட வேண்டுமென்று தோழர் பிரகாசம் கூறுவதை, நாம் பல முறை ஆதரித்துள்ளோம், விசாரணை நடத்தி மந்திரிகளின் 'குட்டு' வெளியாக்கப்பட்டால், காங்கிரஸ் கலகலத்துவிடுமே என்று பயந்து விசாரணை நடத்த காங்கிரஸ் மேலிடம் முன் வரவில்லையென்பதையும் விளக்கியுள்ளோம்.

தோழர் பிரகாசத்தைக் காங்கிரஸ் காரியக் கமிட்டி மிரட்டிப் பார்த்தது; அவர் மிரளவில்லை! வேண்டிக் கொண்டார்கள்; ஆனால் அவர் விட்டுக் கொடுக்கவில்லை. பக்தன் பாதகனானதால் 'பிடி சாபம்' என்று கூறிவிட்டது மேலிடம்.

தோழர் பிரகாசத்தின்மீது காங்கிரஸ் மேலிடம் ஒழுங்குநடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போகிறது. எந்த நேரத்தில்? "காங்கிரஸ் முதலாளிகள் ஸ்தாபனமாகிவிட்டது; கள்ள மார்க்கெட்டுக்காரர்கள் தஞ்சம் முகம் கட்சியாகிவிட்டது; இந்த நிலையில் போகுமானால் வெகு விரைவில் சவக்குழி தோண்டிக் கொள்ளும் என்று காங்கிரசுக்குள்ளேயே இருந்துகொண்டு சில தலைவர்கள் கூறும் இந்த நேரத்தில் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போகிறது!

காங்கிரஸைப் பகைத்துக்கொண்டால் நாட்டில் வாழ முடியாது என்று வங்கசிங்கம் சுபாஷ் சந்திரபோஸ் நாட்டை விட்டு வெளியேறியது அந்தக் காலம்! காங்கிரஸ் முதலாளிகள் [illegible]ஸ்தாபனமாகிவிட்டது, அதைக் [illegible]த்துவிங்கள் எனக்குத் தலை[illegible] பதவி வேண்டாம் என்று ஆச்சார்யா கிருபாளினி ராஜிநாமச் செய்துவிட்டது இந்தக் காலம்! இந்தக் காலத்தில் 'ஒழுங்கு நடவடிக்கை' மூலம் காங்கிரஸ் ஒன்றும் செய்துவிட முடியாது. வேண்டுமானால் தோழர் பிரகாசத்தைக் காங்கிரஸிலிருந்து வெளியேற்றலாம். அதனால் அவருக்கு லாபமே தவிர நஷ்டமில்லை. அடுத்த பொதுத் தேர்தலில் அவருக்கு அதனால் அமோக ஆதரவு இருக்குமே தவிர, எதிர்ப்பு இருக்காது. 'நாட்டின் சுதந்திரத்திற்காகக் காங்கிரஸிலிருந்து போராடினார். சுதந்திரம் கிடைத்தவுடன் முதலாளிகளும், காங்கிரஸ் காரர்களும் காங்கிரஸைக் கைப்பற்றிக் கொண்டார்கள். வஞ்சகர்கள் அவரை வெளியேற்றிவிட்டார்கள்' என்று அவர் புகழப்படுவார். ஆகையால், தோழர் பிரகாசத்தின் மீது காங்கிரஸ் காரியக் கமிட்டி எடுத்துக்கொண்ட ஒழுங்கு நடவடிக்கை, காங்கிரசை சவக்குழிக்கு ஒருபடி அருகில் கொண்டுவந்துவிட்டதென்றுதான் கூறவேண்டும்.

செஞ்சீனாவுக்கு 500 ரஷ்ய விமானங்கள்

ஹாங் காங், ஏப். 6—

கம்யூனிஸ்டு சீனாவுக்கு ரஷ்யா 500 விமானங்களைக் கொடுத்து உதவியிருப்பதாக, கம்யூனிஸ்ட் விமான வட்டாரங்களில் நெருங்கிய தொடர்புடையவர்கள் கூறுகிறார்கள்.

டைரன் பீகிங் டின்ஸ்டின் ஷாங்கே, ஷாங்கோ நான்கிங் ஆகிய இடங்களில் இந்த விமானங்கள் வைக்கப்பட்டிருப்பதாகவும், இவைகளில் எதுவும் தென் சீனாவில் இல்லை என்றும் கூறப்படுகிறது.

தென் ஆப்பிரிக்காவில் கம்யூனிஸ்ட் தடை

கேப்டவுன், ஏப். 6—

தென்னாப்பிரிக்கா பார்லிமெண்டில் இன்னும் சில வாரங்களில் கம்யூனிஸ்டுகளுக்கு தடைவிதிக்கும் மசோதாக்கள் கொண்டுவரப்படவிருக்கின்றன.

கம்யூனிஸ்டு ஸ்தாபனங்களையும், அவர்கள் ஆதிக்கமுள்ள இரா ஸ்தாபனங்களையும் தடைசெய்ய விரிவான அதிகாரங்களை இம்மசோதாக்கள் சர்க்காருக்குக் கொடுக்கவிருக்கின்றன.

இந்தியா - இராக் புகை பொருள்கள் பரிவர்த்தனை

பாக்தாத், ஏப். 6—

இராக் சர்க்காரிடமுள்ள புகை பொருள் செல்வங்களை, தன்னுடன் பரிவர்த்தனை செய்து கொள்ள வேண்டும் என்று இந்தியா கேட்டிருக்கிறது.

இம்மாதிரி கோரிக்கைகள் ஸ்பெயின் பர்ஷியா, பெல்ஜியம், கனடா ஆகிய நாடுகளிடமிருந்தும் வந்திருக்கிறது.

'தூதுவர் வேலைக்கும் எங்களை நியமியுங்கள்'

இராக் பெண்களின் சுதந்திரப் போர்

பாக்தாத், ஏப். 6—

ஸ்தானிகர்கள் போன்ற பதவிகளுக்கு பெண்களை நியமிக்க வேண்டும் என்று, இராக்கிய மாதர் சங்கத்தினரிடமிருந்து மகஜர் இராக் அயல்நாட்டலாகா காரியாலயத்திற்குக் கிடைத்திருந்தது. இந்த யோசனையைத் தாங்கள் ஏற்பதற்கில்லை என்றும், இவ்விஷயத்தை மந்திரி சபைதான் முடிவுசெய்யவேண்டும் என்றும் கூறி அம்மகஜரை மந்திரி சபைக்கு அனுப்பிவிட்டது.

மலேயாவில் இந்தியர் கொலை

சிங்கப்பூர், ஏப். 6—

குலாலம்பூருக்கு அருகிலுள்ள ஸெவனத் மைல் எஸ்டேட்டிலுள்ள ஒரு இந்திய குமாஸ்தா, மலேயா கொள்ளைக்காரர்களால் கொல்லப்பட்டிருக்கிறார். இவர் தனியாகச் சென்று கொண்டிருக்கையில் கொள்ளைக் கூட்டத்தினர் வழிமறித்து கைகளைப் பின்னால் கட்டி துப்பாக்கிகொண்டு சுட்டனராம்.

பின்னர் இக்கோஷ்டியினர் ஒரு கிராமத்தில் புகுந்து அட்டகாசம் செய்ததாகத் தெரிகிறது.

மாலை மணி

சென்னை 7—4—50 வெள்ளிக்கிழமை

தகுதி-திறமை வேண்டும்

நமது நாட்டில் நாடாள அமைந்திருக்கும் சட்ட மன்றங்கள், கருத்தினைச் செலவிடத் தெரிந்தவர்களைவிட, கைதூக்க மட்டுமே தெரிந்தவர்களை மிகவாகக் கொண்டிருக்கின்றன.

சட்ட மன்றங்களின் உறுப்பினர்களில் பெரும்பாலோர், சட்ட மன்றத்தைப் பொழுது போக்கும்கூடமாகவும், சிரித்து விளையாடும் இடமாகவும், கதை பேசி மகிழும் மடமாகவும், தூங்கி எழும் மண்டபமாகவும் கருதி வருகிறார்களேயல்லாமல், நாட்டின் நிலையறிந்து, அதன் தேவையை நிறைவேற்றித் தருவதற்கான சட்டங்கள் இயற்றிடும் அவையாக அதனைக் கருதவில்லை. அத்தகைய பரிதாபத்திற்குரியவர்களே, இந்நாட்டில், மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். சட்ட மன்றத்தின் இடங்களை, அத்தகையோரே எளிதில் பிடித்துக்கொள்ளும் வகையில், நாட்டின் அரசியலமைப்பு இருந்துவந்தது-இருந்தும் வருகிறது.

கைதூக்கவும், தலையாட்டவும், ஆம்—இல்லை என்று சொல்லவும் மட்டுமே தெரிந்தவர்கள் சட்டமன்றத்தில் இடம் பிடிப்பது, அறிவைத் துணைக்கொண்டல்ல, தங்களுக்குச் சாதகமாகவுள்ள பணச்செல்வாக்கு, ஆதிக்க அணைப்பு, அதிகாரச்சலுகை ஆகிய இவைகளின் துணையைக் கொண்டுதான். வெறும் தலையாட்டி பொம்மைகள் சட்ட மன்றத்தை நிரப்புவதைத் தடுத்து சிறிதளவாவது சிந்திக்கும் பண்புடையோரை அமரச் செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு, தோழர் கே. டி. ஷா இந்தியப் பாராளுமன்றத்தில் மசோதா ஒன்று கொண்டுவந்துள்ளார். பாராளும் மன்றத்திலும், மாநில சட்ட மன்றங்களிலும் அங்கம் வகிப்பதற்குக், குறிப்பிட்ட சில தகுதிகள் நிலைநாட்டப்படவேண்டும் என்பதுதான், பேராசிரியர் கே. டி. ஷா அவர்கள் மசோதாவின் நோக்கமாகும்

தோழர் ஷாவின் மசோதாவை, நல்லறிவுடையோர் அனைவரும் ஏற்றுக்கொள்வர்-ஆதரிப்பர்—வரவேற்பர் என்பதில் ஐயமில்லை. எத்தகைய சீரிய மசோதாக்களையும் எதிர்த்து வாதாடி நிற்கும் வக்கிரங்களும், கோணல் புத்தியுடையோரும் பாராளுமன்றத்தில் இல்லாமலில்லை. அறிவை அடிப்படையாகக் கொண்டு, வரும் சீர்திருத்தம் எதையும், எதிர்ப்பது என்றே தீர்மானித்துவிட்ட அத்தகையோரை, அறிவுடையோர் பித்தர் பட்டியலில் சேர்க்காமல்! வேறு என்ன செய்ய இயலும், எனினும் பித்தர்களிடையேதான் தெளிவுப் போதனைபுரிய வேண்டியிருக்கிறது.

வயது வந்தவர்களெல்லோர்க்கும், வாக்குரிமை கிடைத்து விடுவது போன்றே, வயது வந்த ஒரே காரணத்தைக் கொண்டு சட்டமன்றம் நுழைவதும், சட்டம் செய்ய முற்படுவதும், நாடாளத் தொடங்குவதும் ஆனசெயல்கள் செய்யலாகும் என்ற நிலை இருக்குமானால் அந்த நாட்டில் அறிவா கோலோச்சும் ? ஆதிக்கமும்—அதிகாரமும் — பணமும் அல்லவா கோலோச்சக் கிளம்பும்! சட்ட அறிஞர்கள் மன்றம், வெட்டி ஆட்கள் மண்டபமாக அல்லவா மாறும், இன்று இருப்பதைப்போலவும், இன்னமும் கொஞ்சம் மோசமாகவுங்கூட !

சட்டமன்றத்தில் வீற்றிருப்போருக்குக் குறைந்த அளவு தகுதியும், திறமையும் நிலைநாட்டப்பட்டால்தான் கொஞ்சத்துக்குக்கொஞ்சம் பொருள் அறிந்துகொண்டு காரியத்தில் கருத்தினைச் செலுத்தும் தன்மையுடையவர்களை எதிர்பார்க்க இயலும். யார் வேண்டுமானாலும் வரலாம் என்ற நிலை இருக்கிற காரணத்தால்தா[ன்] சில வேளைகளில் சட்டமன்றங்கள் கழுதை புரண்டகளமாக மாறிவிடுகின்றன. பல சட்ட மன்ற உறுப்பினர்களுக்குத் தாம் ஏன் மன்றம் புகுந்துள்ளோம், எதற்காகப் புகுந்துள்ளோம் என்பதே விளங்குவதில்லை! அவர்கள் நாட்டின் நிலைமையும் உணருவதில்லை, தம் நிலைமையையும் உணருவதில்லை, சட்ட மன்றத்தில் கொண்டுவரும் மசோதாபற்றிய விளக்கம் தெரியாது—புரியாது—புரிந்து கொள்ளவும் விரும்புவதில்லை! விவாதங்களைக் கவனிப்பதில்லை, தம் கருத்தைச் சொல்லவும் தெரிவதில்லை, பலசமயங்களில் தமக்குக் கருத்தே இருப்பதில்லை! இப்படிப்பட்ட கழிசடைகள் நிறைந்திருக்கும் சட்ட மன்றங்களையும் பாராளுமன்றத்தையும் தூய்மைப்படுத்த வேண்டி தோழர் கே. டி. ஷா சற்றுத் துணிவோடு மசோதாவைக் கொண்டு வந்துள்ளார். சில மட்டரகங்கள் அதனை எதிர்க்கின்றன!

மற்றெல்லாத் துறைகளிலும் இருப்பவர்களுக்கு, அந்தந்தத் துறைபற்றிய உயர்ந்த அறிவில் மட்டும்முழுத் தேர்ச்சி பெற்றிருந்தால் போதும் ஆனால், அரசியல் துறையில் வாழ்பவர்கள், எல்லாத் துறைகளைப்பற்றியும் பொதுப்படையான அறிவு அவசியம் இருந்தே தீர வேண்டும். எல்லாத் துறையையும் பற்றிய பொதுப் படையான அறிவு இருந்தால்தான், அத்துறைகளையெல்லாம் கட்டியாளும் அரசாங்கத்தை நடத்திச் செல்ல ஏதுவுடையவர்களாகவும், சட்டங்கள் இயற்றத் தகுதியுடையவர்களாகவும் கருதப்படுவார்கள். நாட்டில் உள்ள நிலையைப் புரிந்து கொள்ளவும், தேவையான நிலையைப்பற்றிச் சிந்திக்கவும் அதுபற்றிவரும் விவாதங்களை அறிந்துகொள்ளவும், விவாதங்களில் கலந்து கொள்ளவும், முடிவு பெறவும் ஆன செயல்களைச் சட்ட மன்றத்தில் வீற்றிருக்கும் ஒருவர் செய்ய வேண்டுமானால், குறைந்த அளவு தகுதியும், திறமையும் இருந்தால்தானே முடியும். குறைந்த அளவுதகுதியையும், திறமையையும் கொடுக்கும் சீரிய எளிய கருவி கல்வியைத் தவிர வேறு ஒன்றில்லை. ஆகவேதான், ஒரு குறிப்பிட்ட அளவு கல்வியைத்தகுதியாகப் பெற்றிருப்பவர்களே. சட்ட மன்றத்தில் அங்கம் வகிக்கும் உரிமையைப் பெறவேண்டும் என்று தோழர் ஷா போன்றவர்கள் வாதாடுகிறார்கள்.

கல்வியை ஒரு அளவுகோலாகக் கருதக் கூடாது என்று வாதிடுவோரில் சிலர், ஜனநாயக உணர்ச்சி—தியாக புத்தி — அந்தரங்க சுத்தி—நேர்மை— பண்பாடு—இவைகளை அளவுகோலாகக்கொள்ள வேண்டுமென்கிறார்கள் ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தான் இத்தகைய குணங்களில் ஈடும் எடுப்பும் அற்றவனாக எண்ணிக்கொண்டும் பிறரைக் கொண்டு சொல்லவைத்துக் கொண்டும் இருக்கும்போது, எந்த அளவுகோலைக்கொண்டு எப்படி அளந்து பார்த்து, எங்ஙனம் தேர்ந்தெடுப்பது? கல்வியைப்போல் அவ்வளவு எளி[ய] [...]—உறுதியான அளவு[...] இவைகளெல் [...]

[...] கல்வியறிவு அ[...]லா மல்,குறைந்த அளவு கல்விமட்டும்பயின்றவர்களாகிய- ஆனால் திறமை மிக்கவர்களாகிய ஸ்டாலின், இட்லர், பெவின் போன்றவர்களை உதாரணங்காட்டிக் கல்வியை அலட்சியப்படுத்த முற்படுகின்றனர், அதிகம் படிக்காத சில அறிவிலிகள். அங்குமிங்குமாகக் கிடைக்கும் ஓரிரண்டு அதிசய உதாரணங்களைக்கொண்டு, எப்படி ஒரு பொதுவிதியை நிலைப்படுத்த முடியும்? துருவி ஆராய்ந்து பார்த்தால், படித்தவர்கள் பெறும் அறிவை, மேற் கூறப்பட்ட மேதைகள் தாங்களாகவே முயன்று பெற்றுத்தான் திறமையைக் காட்டமுடிகிறதேயல்லாமல், படிப்பறிவை அடியோடு வெறுத்துவிட்டல்ல

ஆட்சிமன்ற விவாதங்களில் கலந்துகொண்டு திறமையைக் காட்டும் அளவுக்குக் கல்வித் தகுதி பெற்றவர்களே, தேர்தலில் நிற்க உரிமையுண்டு என்ற விதி நிறைவேற்றப்பட்டால்தான், எதிர் காலத்தில் இந்நாட்டிலும்சரி, இந்தத் துணைக் கண்டத்திலும்சரி நல்லாட்சி மலர வாய்ப்பு ஏற்படும். இல்லாத வரையில், தோழர் கே. டி. ஷா அவர்கள் கூறுவதுபோல், 'சட்ட மன்றங்களில் உறுப்பினராயிருப்பது கட்சித் தலைவர்களையும் பத்திரிகைப் பிரமுகர்களையும், முகஸ்துதி செய்தோ, கட்சி சூழ்ச்சிகள் மூலமோ பெறுவதாக' ஆகிவிடும்.

தோழர் கே. டி. ஷா கொண்டுவந்திருக்கும் மசோதா வரவேற்றுப் பாராட்டத்தக்கதாகும். ஒரு தனிக் குழு, எத்தகைய தகுதிகள் ஒரு உறுப்பினர்க்கு இருக்க வேண்டும் என்று ஆலோசித்து முடிவு கட்டுமானால், அதுவும் வரவேற்கத்தக்கதுதான். அப்படிப்பட்ட குழுவில் சிறிது சிந்திக்கும் தன்மை வாய்ந்தவர்களை இடம்பெறச் செய்தால் நல்ல முடிவு ஏற்பட வழி பிறக்கும்.

எனவேதான் சட்டமன்ற—பாராளுமன்ற உறுப்பினர்க்குத் தகுதிவேண்டும் திறமை வேண்டும் என்கிறோம்.

சென்னைக்கு மற்றொரு தெலுங்கு தினசரி

டாக்டர் சி. ஆர் ரெட்டி ஆரம்பித்து வைப்பார்

சென்னை, ஏப். 6—

சென்னைக்கு ஏப்ரல் 22-ந்தேதி முதல் மற்றொரு தெலுங்கு தினசரி 'விஜயப் பிரபா' என்ற பெயருடன் மவுண்ட்ரோடு 'சுமோர்மா' விலிருந்து ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதை மைசூர் சர்வகலாசாலை வேந்தர் தோழர் சி. ஆர். ரெட்டி அன்று மாலை ஆரம்பித்து வைப்பார்.

இந்தியா-பாகிஸ்தானுக்குப் பாராட்டு

லண்டன், ஏப். 6—

காமன்வெல்த் நாடுகளிடையே நல் உறவு நிலைமை இருந்து வருவதையும், தகராறு ஏற்பட்டாலும் அதை அவர்கள் தீர்த்துக்கொள்ள முடியும் என்றும் இதற்கு உதாரணம் இந்தியாவும் பாகிஸ்தானுமே என்று, புதுடில்லி ஒப்பந்தத்தைக் குறிப்பிட்டுப்பாராட்டி சர்வதேச விவகார இன்ஸ்டிடியுட்டின் பத்திரிகையில் ஒருவர் எழுதியிருக்கிறார். இந்த வழி[...] உலக நாடுகள்[...] [...] [...]து அவர் கூறுகிறார்.

லியபால்ட் மன்னராவது நிச்சயம்

பெல்ஜியம் குடியாட்சி நாடுதானா ?

பிரஸல்ஸ், ஏப். 6—

பெல்ஜிய மன்னராக லியோபால்டு வருவது நிச்சயம் என்று தெரியவருவதாக குடியரசுக் கட்சியினர் கூறுகிறார்.

முதலில் மன்னரை பதவி ஏற்கச் செய்து, பின்னர்முடிதுறக்கும்படி செய்யலாம் என்ற தலைவர் டிவெல்ஸ் திட்டம் போட்டதாகவும் வேறுவழியில்லாது போய்விட்டதால் இந்த யோசனையை லியோபால்டே மறுத்துவிட்டதாகத் தெரிகிறது.

சில வாரங்களுக்கு முன் ராஜினாமா செய்த கத்தோலிக பிரதமர் காஸ்டன் ஐய்ஸ்கென்ஸ்தான் மீண்டும் பதவி ஏற்று இப்பிரச்னையைத் தீர்க்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவர்சர்க்கார் அமைத்ததும் நம்பிக்கை தீர்மானத்தைப் பெறவேண்டும். பின்னர்தான் இரு சட்டசபைகளும் கூடி மன்னரை அழைக்கவேண்டும்

கிழக்கு இந்தோனேஷியாவில் சுதந்திரப் புரட்சி

சுகர்ணுவுக்குப் படியமாட்டோமென்று கலகம்

சமஷ்டி சர்க்கார் படை கைப்பற்றப்பட்டது

மக்கசார், ஏப். 6—

இந்தோனேஷிய சமஷ்டி அரசாங்கத்தை எதிர்த்து கிழக்கு இந்தோனேஷியாவில் செய்யப்பட்ட சுதந்திரப் பிரகடனம், புது முறுக்குப் பெற்றுள்ளது. நூற்றுக்கணக்கான கிழக்கு இந்தோனேஷியத் துருப்புகள் புரட்சி செய்து இந்தோனேஷியா சமஷ்டி சர்க்காரின் துருப்புகளையும், அதன் தலைவரையும் கைது செய்துவிட்டார்கள். இதனால் ஏற்பட்ட போராட்டத்தில் இருதரப்பிலும் சிறிது உயிர்ச்சேதம் ஏற்பட்டது. கைது செய்யப்பட்ட துருப்புகள் 140 பேர்களாவார்கள்.

சுகர்ணு சர்க்கார், கிழக்கு இந்தோனேஷியாவில் கலகம் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ள 900 துருப்புகளை அனுப்பினார்கள். இத் துருப்புகள் வந்துசேர 2 மணி நேரத்துக்கு முன்புதான் ராணுவப் புரட்சி நடந்தது.

துருப்புகளை ஏற்றிவந்த ஒரு கப்பல் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தவுடன், துருப்புகள் இறக்கப்பட்டால், [...]க்குமென்று [...] [...]வை [...] [...]ாச் சரித்[...]

கலகம் செய்த துருப்புகள் துறைமுகத்தையும், வானொலி நிலயத்தையும், தேசிய ராணுவக் கட்டிடங்களையும் கைப்பற்றிக் கொண்டார்கள். புரட்சி செய்த வீரர்களுக்குத் தலைமை தாங்கியவர் 25 வயதுள்ள காப்டன் அப்துல் அஜீஸ் என்பவராவார்.

நெதர்லண்டு ராணுவத்திலிருந்த 10000க்கு மேற்பட்ட துருப்புகள் இப்படையுடன் சேர்ந்துகொண்டார்கள்.

இந்தோனேஷிய மந்திரி கைது!

வெஸ்டர்லிங்குக்கு உதவி செய்தாராம்

மேற்கு போர்னியோ தலைவரும், சுகர்ணு சர்க்காரில் இலாகா இலலாத மந்திரியுமான சுல்தான் ஹமீத் அல்காடி, வெஸ்டர் லிங்குக்கு உதவி செய்தாரென்று குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தோனேஷிய அரசாங்கத்துக்குப் போட்டி அரசாங்கம் அமைக்க, வெஸ்டர்லிங் என்ற ஒரு டச்சு ராணுவ அதிகாரி முயன்றதும், முடிவில அவர் சிங்கப்பூரில் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டதும் நினைவிருக்கலாம். வெஸ்டர்லிங்குடன் தொடர்பு வைத்துக்கொண்டதோடல்லாமல், அக்காலத்துக்கு சுல்தான் தலைவராகவும் இருந்தாரென்று, விசாரணை நடத்தியதில் தெரிகிறதென்று ஜகர்த்தா அரசாங்கம் அறிவிக்கிறது.

தி. மு. கழகத் தலைமை நிலைய கட்டிட நிதி

—(0)—

		ரூ. அ. பை.
மவுண்ட்ரோடு தி. மு. கிளைக் கழகம்		15—0—0
தி. ரா. செங்கோடன், திருச்செங்கோடு		5—0—0
வி. டி. அண்ணாமலை, வெண்குன்றம்		5—0—0
டி. எம். பார்த்தசாரதி,	சென்னை	25—0—0
இரா நெடுஞ்செழியன்	,,	15 0—0
க. அன்பழகன்	,,	15—0—0
டாக்டர் சி. கணேசன்	,,	5—0—0
ஆர். நாகபூஷணம்	,,	5 0—0
டி எஸ். வேலன்	,,	5 0—0
கோ. இறைமுடிமணி	,,	2—0—0
ஏ. துரைக்கண்ணு	,,	3—0—0
கே. இராசகோபால்	,,	3—0 0
சி. லோகநாதன்	,,	5—0—0
வி. நரசிம்மன்	,,	2—0—0
கே. மாணிக்கசாமி	,,	2—0—0
ஜே. வேணுகோபால்	,,	2—0—0
டி. மோகன்சிங்	,,	1—0—0
கே. ஜி. பாலன்	,,	1—0—0
பி. ஏழுமலை	,,	1—0—0
சி. கோவிந்தன்	,,	1—0—0
ஆர். எம். ராதாகிருஷ்ணன்	,,	1—0 0
பி. சாமிக்கண்ணு	,,	1—0—0
ஆர். ராமச்சந்திரன்	,,	1—0—0
எம். முனுசாமி	,,	2—0—0
ஆர். நாகலிங்கம்	,,	1—0—0
ஜெயராமன்	,,	1—0—0
டி. ஏ. ராமலிங்கம்	,,	2—0—0
		127—0—0

வேலை நிறுத்தமே வேண்டும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளிகள் [illegible] உருகு [illegible] கூறுகி [illegible] ...ருமையம்பது மற்றொருவர் கூற்று. இவ்வாறு கூறுபவர் உண்மையில் தொழிலாளர்கள் பிரதிநிதி தானா? அல்லது தொழிலாளர் இயக்கத்தை நசுக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் துரோக வேலைசெய்ய வந்த முதலாளிகளின் ஐந்தாம் படைக்காரரா? தொழிலாளர்கள் இந் நிலையில் விழிப்படையவேண்டியது மிக அவசியமாகும்.

டாரிசலேனைக்காகத் தொழில் சங்கங்களுக்கு மசோதா பிரதிகள் அனுப்பப்படவேண்டுமென்று தோழர் தாஸ் கூறியதற்கு தொழில மந்திரி தோழர் ஜகஜீவன்ராம் கூறும்பதில், அறிவுடையோர் ஏற்றுக் கொள்ள முடியாததுமட்டுமல்ல, அவநம்பிக்கையான நிலையையும் காட்டுகிறது.

மசோதாவைப் பல மொழிகளில் பெயர்த்தெழுதுவது கஷ்டமாம்! அதைத தொழிலாளருக்குச் சேரும்படி செய்வது அதைவிடக் கஷ்டமாம்!! அவ்வாறு செய்தாலும் தொழிலாளருக்குப் படிக்கத் தெரியாதே; தோழர் தாஸ்போன்றவர்கள் கூறுவதைக் கேட்டுக் கொண்டுதான் அதன்படி அபிப்பிராயம் தெரிவிப்பார்கள் என்று கூறுகிறார் மந்திரியார். பாவம்! தொழிலாளர்கள் தன்னை நம்பவில்லை. தோழர் தாஸ் போன்றவர்களையே அதிகமாக நம்புகிறார்கள்; ஆகையால், அவர்களுக்கு மசோதாவைப் பற்றித் தெரியாமல் இருந்தாலே நல்லது. தெரிந்தால் ஆபத்து; கிளர்ச்சிசெய்து [illegible] ...ன்றோ [illegible] பயப்படு... தோழர் 'உலக' ஜீவன்ராம்.

ஏமாற்றுவித்தை வேண்டாம். ஏழைகள், எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்தான். தொழிலாளர்கள் அவர்களை ஏய்த்துவிடலாம் என்று நினைக்கவேண்டாம். தோழர் தாஸ் போன்றவர்களுக்கு வாய்ப் பூட்டிட்டு, அதுவும் முடியாவிட்டால் அவர்களுக்குக் கைப்பூட்டிட்டு தொழில் உறவு மசோதாவைச் சட்டமாக்கலாம். தடியடிக்குப் பயந்து, துப்பாக்கிப் பிரயோகத்துக்குப் பின் வாங்கித் தொழிலாளிகள் சட்டத்துக்கு உட்பட்டு நடக்கலாம். ஆனால் வருங்காலச் சந்ததி சும்மா இருக்காது. சட்டம் உடைக்கப்படுவது மட்டுமல்ல, சட்டம் செய்தவர்களைத் துரோகிகள் என்று தூற்றாமல் இருக்காது.

முன்னணி வகுத்துக் கொண்டு தொழிலாளர் முன்னேறுவதைத் தடுக்கும் இம்மசோதா, வேலைநிறுத்த உரிமையைப் பறிக்கும் இம்மசோதா. தொழிலாளிகளை முதலாளிகளின் அன்புக்காக ஏங்கும்படி செய்யக்கூடிய இம்மசோதா, தொழிலாளரிடையே வேற்றுமையை வளர்த்து அவர்களைப் பல பிரிவுகளாக்கிச் சிறகுடைந்த பறவைபோல் தொழிலாளர் சமூகத்தை ஆக்கக்கொண்டுவரப்பட்ட இம்மசோதா தொழில் உறவு மசோதாவை அரசியலார் கைவிடுவதுதான் தங்களுடைய கடைசி மரியாதையைக் காப்பாற்றிக்கொள்வதாகுமென்று நாம் எச்சரிக்கிறோம்.

இனி நடப்பவை

சென்னை முத்தியாலுபேட்டை:- இவ்வூர் திருவள்ளுவர் இளைஞர் கழகத்தின் முதல் ஆண்டு விழா, 9—4—50 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு பிராட் டாக்கிஸிற்கு அருகாமையிலுள்ள ஜீல்ஸ் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்திற்கு முன்னர் நடைபெறும். விழாவிற்குத் தோழர் மா. இராசமாணிக்கம் பி. ஓ. எல், எம். ஓ. எல். தலைமை வகிப்பார். தோழர் ரா. பி. சேதுப் பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள் பரிசளிப்பார் தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

* * *

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை:- இவ்வட்டத்தில் தி. மு. கழகக் கிளை அமைக்க வேண்டியிருப்பதால், 9 4 50 ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு பாலகிருட்டிணப் பிள்ளை வீதி, 18,எண் இல்லத்தில் அமைப்புக் கூட்டம் நடைபெறும் ஆர்வமுள்ள தோழர்கள் அனைவரும் வருமாறு தோழர் கே. செயராமன் தெரிவிக்கிறார்.

* * *

சென்னை, தேனம்பேட்டை :— நாடகக் கழகத்தின் சார்பில், சாந்திரஸ் மைதானத்தில் 7-4-50 மாலை 6 மணிக்கு சோமநாத்-தங்கமணி நடன நாடகம் நடைபெறும். சென்னை மேயர் தோழர் செரியன் நாடகத்திற்குத் தலைமை தாங்குவார்.

* * *

திருவில்லிபுத்தூர்:— இவ்வூர் தி. மு. கழக 12—3—50-ல் நடந்த துவக்க விழா பற்றி 9-4-50 அன்று, வரவு செலவு கணக்கு பார்க்க வேண்டியிருப்பதால், தோழர் ஆராச்செட்டி அர்ச்சுனன் இல்லத்தில், மாலை 7-30 ம[illegible]

அம்பூர்:—9-4-50 ஞாயிறு மாலை 6 மணிக்கு இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் தோழர்கள் டி. கே. சீனிவாசன், அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்

* * *

குல்லைக்குண்டு:— மதுரை மாவட்டம் குல்லலக்குண்டு தி. மு. க. துவக்க விழா 9—4—50-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு தோழர் இ. சாத்தன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர்கள் சி. பி. சிற்றரசு, முத்திருளாண்டி ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்

பாதையை விட்டு இரயில் இறங்கியது

மூவருக்குக் காயம்

பாட்னாவுக்கும் ராஞ்சிக்குமிடையே ஓடும் எக்ஸ்பிரஸ் வண்டியின் போகி யொன்று நேற்றிரவு சுமார் 11-மணிக்கு தண்டவாளத்தை விட்டு இறங்கியதன் விளைவாக,மூன்று பேர் காயமடைந்தார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

தளபாத் ரயில்வே நிலையத்திற்குள் அந்த ரயில் பிரவேசித்துக் கொண்டிருக்கும்போது, இவ்விபத்து ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. விபத்தின் காரணம் பற்றி விசாரணை செய்யப்படுகிறது.

தென்னாப்பிரிக்காவுக்கு ஜாப் ஜவுளி

கேப்டவுன், ஏப். 6—

தென்னாப்பிரிக்கா ரூ. 78,00,000 பெறுமானமுள்ள ஜவுளியை ஜப்பானிடமிருந்து வரவழைக்கவிருக்கிறது. இதில் முதல் கோட்டா அடுத்த மாதம் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தங்கநீகாவில் நிறத்திமிருக்குச் சவுக்கடி!

—(0)—

வெள்ளையருக்குத் தனிச் சலுகை கிடையாது

லண்டன், ஏப். 6—

வெள்ளையர் கருப்பர் எல்லோரும்சேர்ந்த ஒருபொதுத் தொகுதிவாக்காளர்பட்டியலை தயாரிப்பதென்று, தங்கநீகா நிர்வாகம் உறுதிகொண்டிருப்பதாக நம்பப்படுகிறது.

தங்கநீகாவிலுள்ள வெள்ளையர்களும், கென்யாவிலுள்ள ஐரோப்பியரும் இதைப் பலமாக ஆட்சேபிக்கிறார்கள்.

ஐரோப்பியரல்லாதார மெஜாரிட்டி இருப்பதால் இதை எதிர்த்தால்கூட பிரதிநிதித்துவமே இல்லாமல் புறக்கணிக்கு விடப்படலாம் என்ற பீதியும் வெள்ளையரிடையேயிருந்துவருகிறது.

கென்யா வாக்காளர் யூனியன் இதை எதிர்த்துத் தீவிர பிரசாரம் நடத்திவருகிறது அந்த யூனியனின் ஆக்டிங் பிரஸிடெண்ட் டெளக்ஸ் தங்கநீகா நகரையே ரொடீஷியாவுடன் சேர்த்து ஒரு பெடரேஷனாக இருக்கவேண்டும் என்றும், இதனால் ஆசியா ஆப்பிரிக்கர் சுதந்திரத்திற்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது என்றும் கூறுகிறார்.

ஐரோப்பியர்கள் மட்டும் இல்லாவிட்டால் ஆசியர், ஆப்பிரிக்கர் போலீஸ் ராஜ்யத்தில் [illegible]மைகளாக இருக்க நேரி[illegible] [illegible]ன்று இவர் பயமுறுத்து[illegible]

தங்கநீகா வெள்ளையர் எதிர்க்கவில்லை

தங்கநீகாவில் உள்ள தங்கா என்ற இடத்திலுள்ள வெள்ளையர் மட்டும் இந்தக்கூக்குரலிடுவதில் கலந்து கொள்ளவில்லை. அங்குள்ள தலைவரான ஹிட்ச்காக் எல்லா வகுப்பினருக்கும் போதிய பாதுகாப்பு வேண்டும் என்றும், பொது வாக்காளர் ஜாபிதாவினால் தங்காவைப்பற்றிய வரையில் வெள்ளையர்புறக்கணிக்கப்பட மாட்டார்கள் என்றும், தங்கநீகா தனித்துச் சுதந்திரமாக இருப்பது வரவேற்கத்தக்கதே என்றும் கூறினார்.

இலங்கையில் இறப்பு விகிதம்

முன்னைவிட குறைந்துள்ளது

1949-ம் ஆண்டு இலங்கை மரண விகிதாசாரத்தில் என்றுமில்லாத குறைவேற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. அவையாவன:— சொதம்படையாக மக்கட் தொகையில் ஆயிரத்துக்கு 126 சத விகிதமும், குழந்தைகளில் பிறந்த இறந்தவை ஆயிரத்துக்கு 87 சத விகிதமும், தாய்மையில் ஆயிரத்துக்கு 65 சத விகித முமாகும்.

திருமணங்கள்

திருமணம் பதிவு சட்டத்தின் கீழும், கண்டிய விவாக சட்டத்தின் கீழும் 1949-ம் ஆண்டில் மொத்தம் 41,164 திருமணங்கள் பதிவாகியுள்ளன. இவற்றில் பொதுச்சட்டபடியான விவாகங்கள் 32,872; கண்டிய கலியாணங்கள் 8,292 ஆகும்.

பிறப்புகள்

மேற்படி ஆண்டில் பிறப்புகள் 291 191 ஆகும்; இவற்றில் 148,341 ஆண் குழந்தைகளும், 142,850 பெண் குழந்தைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு நகரில் 1948-ல் ஆயிரத்துக்கு 54 6 சத விகிதத்துக்கெதிராக 59 7 சத விகிதம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மலேயாவில்விளையாட்டு துப்பாக்கிகளுக்கும் தடை

விளையாட்டுத்துப்பாக்கிகளைகூட மலேயாவில் இறக்குமதி செய்யக்கூடாதென்று பெடரேஷன் சர்க்கார் தடையுத்திரவு பிறப்பித்திருக்கிறது.

இந்த விளையாட்டு துப்பாக்கிகளையும் சில கிரிமினல்கள் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்றும், அதைத் தடுக்கவே இந்த உத்திரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் ஒரு போலீஸ் அதிகாரி கூறுகிறார். மூன்று வருஷங்களுக்கு முன் இம்மாதிரி ஒரு தடை விதிக்கப்பட்டிருக்கிறதாம்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

8 - 4 - 50

செந்துறை:—சி பி. சிற்றரசு, அ. பெ. தர்மலிங்கம், எம். எஸ். மணி.

ஆரணி:—என். வி. நடராசன், புலவர் கோவிந்தன், சி. வி. குப்புசாமி, மா. இளஞ்செழியன்.

9 - 4 - 50

கோவை:—ஏ. சித்தையன், கிருட்டினசாமி.

திருவாதவூர்:—ஏ. வேலுச்சாமி, எஸ். முத்து, எம். அய்யாச்சாமி, எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம்.

[illegible]லூர்:—டி. கே சீனிவாசன், ஏ. பி, தர்மலிங்கம்.

சித்தாளந்தூர்:—என். கே. பி. வேல், என். பி. சதாசிவம், டி. ஜி. கணபதி.

குல்லலக்குண்டு :—சி. பி. சிற்றரசு, முத்திருளாண்டி

நாடெங்கும் அழகிரி நினைவு நாள்

சிதம்பரம்

28-3-50 செவ்வாய்க் கிழமை இரவு சமாசாமைச் தெரு வடகோடியில், இவ்வூர் தி. மு. க. தோழர்களால் அழகிரிசாமி நினைவு நாள் கொண்டாடப்பட்டது. கழகக் கொடியைத் தோழர் ப. து. ரெங்கசாமி அவர்கள் ஏற்றுவித்தார். மறைந்த மாவீரர் அழகிரியின் தொண்டுகளைப்பற்றி பேசப்பட்டு, எல்லோராலும் வீர வணக்கம் செலுத்தப்பட்டு தோழர் திருவேங்கடம் அவர்களால் நன்றிகூற கூட்டம் இனிது கலைந்தது.

நெடும்பலம்

1 4-50 சனிக்கிழமை இவ்வூர் தி. மு. க. சார்பாக அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி நினைவுநாள் கூட்டம் தோழர் டி. எஸ். கலியாண சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத் துவக்கத்தில் தலைவர் அழகிரி நினைவுநாள் கொண்டாட வேண்டிய அவசியத்தைப்பற்றி சிறிது நேரம் பேசினார்கள். அடுத்து தோழியர் சாவித்திரி அம்மையார், தோழர் திராவிடமணி ஆகியோர் அழகிரி அவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட பல சம்பவங்களைக் குறித்து விளக்கமாகப்பேசினார்கள்.

கடைசியாக தோழர் என். வி. நடராசன், அரசியலாரின் போக்கும் பற்றியும், கடவுளின் பேரால் நாட்டில் நடக்கும் கயமைத்தனத்தைப் பற்றியும் விளக்கமாகப்பேசி, அழகிரி நினைவு நாளாகிய இந்த தினத்தில் இவைகளை ஒழிக்க, அனைவரும் தி. மு. கழகத்தில் சேர்ந்து பணியாற்றவேண்டிய அவசியத்தைப்பற்றியும் ஒரு மணிநேரம் விளக்கமாகப் பேசினார்கள். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின் தோழர் குஞ்சிதபாதம் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

பேராவூரணி

30 3-50 அன்று இவ்வூரில் மறைந்த மாவீரன் அழகர்சாமி நினைவுநாள் கொண்டாடப்பட்டது. தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் தலைமைதாங்கினார். அன்று மாலை நடந்த பொதுக்கூட்டத்தில் தி. மு. க. பொதுச்செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்கள் அழகர்சாமி அவர்களின் சேவையைப் பற்றி விரிவாக சொற்பொழிவாற்றினார்கள்.

தோழர்கள் ஈ. வே. கி. சம்பத், என். எஸ். இளங்கோ, காஞ்சி கலியாணசுந்தரம், என். வி. நடராசன் முதலியவர்கள் அஞ்சாநெஞ்சன் அழகர்சாமி அவர்களின் குணநலன்களைப்பற்றியும், சேவையைப் பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள்.

திருத்தங்கல்

2—4—50 ஞாயிறு மாலை 4 மணிக்கு கடைத்தெருவில் உள்ள தோழர் ஏ. எஸ். கனி கடைக்கு முன்பாக தி. மு. கழகக்கொடியை செயலாளர் தோழர் எஸ். வி. சொன்னமூர்த்தி அவர்கள் ஏற்றுவித்தார். பிறகு மறைந்த மாவீரன் அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமிக்கு வணக்கம் செலுத்தப்பட்டது.

அடுப்புக்கோட்டை

2-4-50 அன்று இரவு இவ்வூர் நிவாகாரய வாலிபர் சங்கத்தில், தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் தலைமையின் கீழ் அஞ்சாநெஞ்சன் அழகிரி நாள் பொதுக் கூட்டம் நடந்தது. தோழர்கள் சிவ. சண்முகசுந்தரம், கே. ராமசாமி, ச. கனிமுத்து ஆகியோர் அழகிரியின் 'அருந்திறனும் பெரும் பணியும்' என்பது பற்றி விரிவாகப் பேசினார்கள். தலைவர் தமது முடிவுரையில் சீர்குலைந்த திராவிடத்தைச் செப்பனிட அஞ்சாநெஞ்சன் அழகிரிபோல் அனைவரும் ஆகவேண்டுமென்றும், அத்தகைய குணத்தை எடுத்தும் பணிபுரிவோமாக என்றும் பேசினார். தோழர் ச. கனிமுத்து நன்றிகூற கூட்டம் இனிது கலைந்தது.

சென்னை புதுப்பேட்டை

தி. மு. கழக கட்டிடத்தில் 28 3-50 அன்று அழகிரிசாமி அவர்களின் நினைவுநாள் கொண்டாடப்பட்டது. கழகப் புதியகொடி யேற்றப்பட்டது. அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமியின் திருவுருவப்படம் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. விழாவிற்குத் தோழர் சி. டி. சஞ்சீவி அவர்கள் தலைமைவகித்தார். பல தோழர்கள் அஞ்சாநெஞ்சனின் வீரவாழ்க்கையைப்பற்றியும் அவரால் நாட்டு மக்கள் அடைந்த நலனைப்பற்றியும், தன்மதிப்பு இயக்கத்திற்கு அவர் ஆற்றிய தொண்டினைப்பற்றியும், அவர் நினைவு நாளன்று நாம் செய்யவேண்டிய உறுதிப்பாடு ஆகியவற்றைவிளக்கிப் பேசினார்கள். கடைசியாகத் தோழர் வெ. மதிவாணன் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

மேலப்பழுவூர்

3[illegible]-3-50 அன்று இவ்வூர் தி. மு. க. சார்பாக தளபதி அழகிரிசாமியின் நினைவுநாள் கூட்டம் கழக கட்டிடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு செயலாளர் தோழர் எம். ஆர். செல்லப்பா தலைமை தாங்கினார். தலைவர் தம் தலைமை புரையில், தளபதி அழகிரிசாமி அவர்கள் சுயமரியாதை இயக்கம் தோன்றிய முதல் ஈரோட்டுத் தனி மாநாடு வரை இந்நாட்டிற்கு ஆற்றியிருக்கும் தொண்டினைப் பற்றியும், அந்த மாவீரனின் நினைவு நாள் கொண்டாடவேண்டியதின் அவசியம் பற்றியும் விரிவாகப் பேசினார்கள். இறுதியாக அழகிரிக்கு வீர வணக்கம் செலுத்தப்பட்டு, தோழர் டி. வீ. கே. சுந்தரராசன் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

குறிஞ்சிப்பாடி

2—4—50 மாலை 6 ம[illegible] இவ்வூர் தி. மு. கழக சார்பில் [illegible] பெற்ற அஞ்சாநெஞ்சன் அழகிரியின் நினைவுநாள் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட இரு சைக்களில் அழகிரியின் உருவப்படம் வைத்து வாத்திய முழக்கங்களோடு ஊர்வலம் புறப்படும் முன் தோழர் கு. த. வெ. பழனியப்பன் அவர்களால் கழகத்தின் முன்னதாக இயக்கக் கொடியேற்றப்பட்டது நகரின் முக்கிய தெருக்களின் வழியாகச் சென்று வெகுசிறப்பாக ஊர்வலம் ரேடியோ நிடலை அடைந்தது. கூட்டத்துவக்கத்தில் தோழர் இரா கலாமணி இயக்கப்பாடலும், திராவிடப்பண்ணும் பாடினர். கண்ணுடித் தோழர் ரா. ப. சுப்பையா தலைமைதாங்க கூட்டம் இனிதே துவங்கியது. தோழர் இரா. கலாமணி, அழகிரியின் சேவையைப் பாராட்டிப் பேசினர். பிறகு தோழர் க. நாராயணசாமி அழகிரி நினைவுநாள் ஏன்? எனும் விரிவுரையாற்றினர். தோழர் கு. த. வெ. சொக்கலிங்கம், இயக்க வரலாறு கூற தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் கு. த. வெ. பழனியப்பன் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

திண்டுக்கல்

2-4 50 அன்று மாலை இங்கர் மாரியம்மன் திடலில் அழகிரிநாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழர் இலா. வீராசன், தலைமைவகித்தார். தலைவர் முன்னுரையாக அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமியின் வாழ்க்கை வரலாறு, அவருடைய குணநிசயங்களைப்பற்றியும் அழகாக எடுத்துக் கூறினார். அடுத்து மாணவர் கழகச் செயலாளர் தோழர் அங்குசாமி 'மேல்நாடும், அழகிரியும்' என்பது பற்றி நீண்டநேரம் அழகாகப் பேசினார். அடுத்து, தோழர்கள் கந்தசாமி, எம். பரமசிவம், என். முத்து ஆகியோர் மறைந்தமாவீரன் அழகிரிசாமியின் வாழ்க்கை வரலாறு அவரது சுயமரியாதை இயக்கப் பிரசாரம் செய்ய ஆரம்பித்த கால முதல், க்ஷயரோகக் கிருமிகளால் குறைபாடடைப்பட்டு உயிர்நீத்தவரை குறிப்பிட்டுப் பேசினார்கள். தலைவர் முடிவுரைகூற, செயலாளர்தோழர் என். முத்து நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

சென்னை மவுண்ட்ரோடு

2-4-50 அன்று இவ்வூர் தி. மு. கழக சார்பில், மறைந்த மாவீரர் அழகிரிசாமியின் நினைவுநாள் கொண்டாடப்பட்டது. கூட்டத்திற்குத் தோழர் சுந்தரசன் அவர்கள் தலைமை வகித்தார். தோழர்கள் எ. வீரமணி, சி. அரங்கநாதன். தணியன், கே. கேசவன் ஆகியோர் அழகிரிசாமியின் வாழ்க்கை வரலாறு, சேவை முதலியவைகளை விளக்கிப்பேசியபின், பன்மொழிப் புலவர், கா. அப்பாதுரை அவர்கள் அஞ்சா நெஞ்சன் அழகிரி அவர்களின் அரியசேவையைப்பற்றிப் பேசி, அன்னாரின் உருவப்படத்தை திறந்து வைத்தார். அவரது பேச்சின் சுருக்கமாவது:—

அழகிரி நினைவுநாளை நாம் கழக சார்பில் நடத்துவதைவிட, பல கட்சிக்காரர்களும் நடத்துதல் வேண்டுமென்றும், தி. மு. கழக குறிக்கோள் அரசியல், பொருளாதாரம், இன உணர்ச்சி இவைகள் முக்கியமென்றும், நமது அழகிரி அவர்கள் வடநாட்டில் பிறந்திருந்தால் அவர் இறந்தநாளை நினைக்க கூடமாட்டார்கள் அங்குள்ளவர்கள் என்று வடநாட்டுக்கும், தென்னாட்டுக்குமுள்ள பல வேற்றுமைகளைக் குறிப்பிட்டார்.

நமது இயக்கம் பல பெரியார்களுடன் கருத்தறிவுக் கொள்கைகளுடன் மாறுதலடைந்து வருகிறது என்றும், 1938-ல் இந்தி எதிர்ப்பில் [illegible] அவர்கள் அஞ்சா நெஞ்சத் [illegible] நடத்தி வந்த [illegible] அடைந்து இருந்தார். [illegible] அவர்களுக்கு உழைப்பு அதிகம், பேணிப்பு குறைவு. ஆகையால்தான் அவர் நோயால் பீடிக்கப்பட்டு உயிர் நீத்தார். அவர் விட்டுச்சென்ற பணியை, அண்ணாதுரை அவர்கள் நடத்தி வருவதால், அவருக்குத் தளபதி என்ற பட்டம் கொடுக்கப்பட்டதென்றும், தோழர் அழகிரி தோழன் என்ற முறையில் தன் மதிப்புடையவர் (தலைமைப் பதவியில் அல்ல) என்றும், அறிஞர், பெரியார், எப்படி நாட்டுக்கு முக்கியமோ, அதைப்போல் அஞ்சா நெஞ்சன் அழகிரி போன்றவர்கள் நம் நாட்டுக்கு அநேகர் தேவை என்றும், நாமும் அவரைப்போல் அவர் விட்டுச்சென்ற பணியைச் செய்துவரவேண்டும் என்றார். கடைசியாக, கழகச் செயலாளர் தோழர் சி. என். ஜெயவேல் அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

மிளகு உற்பத்தியில் ஆராய்ச்சி

சென்னை அரசாங்கம் நடத்தும்

கள்ளிக்கோட்டை, ஏப். 6— வடமலபாரிலுள்ள ம[ா]ட்டனூர் நூர்கருகில் ஒரு மிளகுத் தோட்டத்தைச் சென்னை அரசாங்கம் ஆரம்பமாகவேண்டியவற்றைச் செய்துமுடித்துவிட்டது. இம் மிளகுத் தோட்டத்தில் ஆராய்ச்சி நடத்தி, விஞ்ஞான ரீதியில் மிளகு பயிரிடுவதை கிராம மக்களுக்கு விளக்கப்படும்.

இதற்காக ஒரு மிளகு ஆராய்ச்சி நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்காக 85 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது.

துருவத்தில் பனிக்கட்டி உருகுவதேன்?

லண்டன், ஏப். 6— துருவப்பிரதேச நாடுகளில் சூடேறிவருகிறதென்றும், 1200 வருஷங்களுக்கு முன் உள்ள நிலைமை ஏற்படும்வரை இந்நிலைமை நீடிக்கலாம் என்றும் டாக்டர் வி. இ. பி. ப்ருக்ஸ் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சைபீரியாவில் அநேக நூற்றுண்டுகளாக உறைந்து கிடந்த பனி இப்பொழுது உருக ஆரம்பித்திருக்கிறது.

கிரீன்லாந்து விவசாயநாடாகலாம்

பனிக்கட்டிகள் உறைந்து ஜனங்கள் வசிப்பதற்கே லாயக்கில்லாமல் இருந்துவந்த கிரீன்லாந்து மீண்டும் விவசாய நாடாகலாம் என்று அவர் கூறுகிறார்.

இந்த நிலைமை மாறுதலுக்கு காரணம், வட அட்லாண்டிக்கில் வீசும் தென்மேற்கு காற்றினுல்தான் என்றும், இக்காற்று சூடாக இருக்கிறதென்றும் அவர் கூறுகிறார்.

காற்று ஏன் இம்மாதிரி மாறியது என்பது தான் தெரியவில்லை என்று அவர் கூறுகிறார்,

சூரிய புள்ளிகள் காரணமா?

சில விஞ்ஞானிகள் இதற்கு சூரியனிடமிருந்து கிளம்பும் கிரண அலைகளே காரணம் என்றும், சூரியனில் ஏற்பட்டுள்ள புள்ளிகளே இதற்குக்காரணமாக இருக்கலாம் என்றும் சில விஞ்ஞானிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

சில நூற்றுண்டுகளில் துருவப்பிரதேசமே இல்லாது மறைந்து விடலாம் என்றும் அபிப்பிராயம் இருந்து வருகிறது.

இங்கிலாந்தில் ஜனத்தொகை அதிகரிப்பு

குழந்தை இறப்பு குறைகின்ற[illegible]

லண்டன், [illegible] இங்கிலாந்து வேல்ஸில் டிசம்பரில் 43496000 ஆக இருந்த ஜனத்தொகை அடுத்த 40 வருடங்களில் 46588000 ஆக உயர்ந்துவிடும் என்று எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது.

1949 சிசு மரணம் இறந்தே பிறப்பது முதலியவை மிக மிகக் குறைவாக இருந்தது. ஒரு வருடத்திற்குள் இறந்த குழந்தைகள் 1000-க்கு 32 தான்.

இன்னும் 40 வருடங்களில் 64-வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை இப்பொழுதுள்ள 10·9% 16·8% ஆக அதிகரித்துவிடலாமாம்.

விளம்பரம்

M. R. பாண்டியன், பாண்டியன் டிரேப்பரி, 25, M. C. ரோடு, வண்ணாரப்பேட்டை, தெரிவித்துக் கொள்வதாவது:—

எனக்கும் மேற்படி என்னுள்ள வீட்டு சொந்தக்காரருக்கும் ஏற்பட்ட வியாஜ்யத்தை முன்னிட்டு கோர்ட்டார் எனக்குத் தெரியப்படுத்தாமல் கடையைக் காலிசெய்துவிட்டபடியால், கடிதப் போக்குவரத்துகள் 14, கல்மண்டபம்ரோடு, வண்ணாரப் பேட்டை என்ற முகவரிக்கு, நான் வேறு ஒரு இடத்தில் கடைத் திறக்கும் வரை, எழுதும்படி என் வாடிக்கைக்காரர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இங்ஙனம்,

5-4-50 M. R. பாண்டியன்.

அறிவிப்பு

ரெஜின மூட்டைப் பவுடர் மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரையைத் தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

G. பழனியப்ப முதலியார், மதுரை.

ஏஜெண்டுகளுக்கு!

மார்ச்சு 31-ந் தேதியுடன் இவ்வாண்டு கணக்கு முடிக்க வேண்டியிருப்பதால், நிலுவையுள்ள பாக்கி பூராவும் இம் மாதம் 10-ந்தேதிக்குள் அனுப்பித்தரவேண்டும். அப்படி அனுப்பத் தவறும் ஏஜெண்டுகளுக்குப் பத்திரிகை நிறுத்தப்படும் என்பதை கண்டிப்பாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்: "மாலைமணி"

இதாலியில் கம்யூனிஸ்டுகள்- சர்க்கார் கைகலப்பு

[illegible]பாமென்ற பீதி [illegible] ஏப். 6— [illegible] கம்யூ[illegible] மிடையே கைகலப்பு ஏ[illegible] என்று இங்குள்ள வட்டாரங்களில் கூறப்படுகிறது.

மிலனில் நடைபெறவிருக்கும் சர்வதேசச் சந்தையை ஆரம்பித்து வைப்பதற்காக இதாலி பிரஸிடெண்ட் மிலான் செல்லவிருக்கிறார்.

வட அட்லாண்டிக் ஒப்பந்தத்தின்படி அமெரிக்க ஆயுதங்களின் முதல் சப்ளை அதே சமயத்தில் டிரிஸ்டேயில் வந்திறங்கவிருக்கிறது இச் சம்பத்தைக் கம்யூனிஸ்டுகள் பயன்படுத்திக்கொண்டு அதன் விளைவாக கைகலப்பு ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அறிக்கை

இந்து சட்டத் திருத்த மசோதா பற்றி பொது மக்களின் கருத்தை அறிய, ஏப்ரல் 14-ம் நாளன்று டில்லியில் மாநாடு ஒன்று கூட்டப் போவதாகத் தோழர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் அறிவிப்புச் செய்துள்ளதால், அதற்குள் அவர் கைக்கு போய்ச் சேருமாறு, திராவிட முன்னேற்றக் கழகக் கிளைக் கழகங்கள் கீழ்கண்டபடி தந்தி தபால் மூலம் செய்தியை அனுப்பி வைக்கக் கோருகிறேன்.

அனுப்பிவைக்கவேண்டிய செய்தி:—

Dravida Progressive Federation of............offers its wholehearted Support to the Hindu Code Bill. This Federation considers the Bill as the minimum effort at reorganisation of Hindu Society on Rational principles, and urges the government in general and Dr. Ambedkar in particular to legislate without delay or hesitation or modification the Hindu Code Bill and without paying any heed to the cooked up opposition of the orthodox elements and the reactionary groups.

செயலாளர்,
பிரசாரக் குழு-தி. மு. க.
தலைமை நிலையம் 5 4-50.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.